ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2147/65 - 2019 ඔක්තෝබර් මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.31
2147/65 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### சனாதிபதி செயலகம்

சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்காக விண்ணப்பம் கோருதல்

அரசியலமைப்பின் 33(2) (உ) உறுப்புரைக்கமைய சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. ஆகையால் சட்டத்துறையில் அதிசிறந்த நிலையடைந்துள்ளவர்களும், தொழிலில் உச்சகட்ட நேர்மையை பேணிக்கொண்டிருப்பவர்களுமான சட்டத்தரணிகள் இதற்காக விண்ணப்பிப்பதற்காக உரித்துடையவர்களாவர்.

அதற்கமைய 2019.10.29 ஆந் திகதிய 2147/37 ஆம் இலக்க, அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டிகளில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற சட்டத்தரணிகள் பின்வரும் படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் 2019.11.07 ஆந் திகதியல்லது அதற்கு முன்னராக கிடைக்கக் கூடியவாறு சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம், கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்தை வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல்" எனும் சொல்லை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அத்தினத்திற்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாததுடன், விண்ணப்பம் தொலைதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக வகை சொல்லப்படமாட்டாது.

விண்ணப்பப்பத்திரத்தை www.presidentsoffice.gov.lk ஊடாகவும் பதிவிறக்கம் செய்யலாம்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

**சனாதிபதி சட்டத்தரணி பதவிக்கான விண்ணப்பம்**

| | |
|---|---|
| 01 | முழுப் பெயர் : |
| | (i) சிங்கள மொழியில் : |
| | (ii) ஆங்கில மொழியில் : |
| 02 | (i) தபால் முகவரி :<br><br>(ii) மின்னஞ்சல் முகவரி :<br><br>(iii) தொடர்பு இலக்கங்கள் :<br>(i) கையடக்கத் தொலைபேசி :<br>(ii) வதிவிடம் :<br>(iii) அலுவலகம்:<br>(iv) வேறு: |
| 03 | பிறந்த திகதி : வயது : |
| 04 | தேசிய அடையாள அட்டை இல. :<br>(i) நீங்கள் வேறு ஏதாவது நாடொன்றில் / நாடுகளில் குடியுரிமை பெற்றவரா? : |
| 05 | ஒரு சட்டத்தரணியாகச் சேர்ந்துகொண்ட திகதி :<br>(i) சட்டத்தரணிகள் சங்க உறுப்புரிமை இல. :<br>(ii) கிளைச் சங்கத்தின் பெயர் : மாவட்டம் : |
| 06 | (i) நீங்கள் நொத்தாரிசு உரிமத்தைப் பெற்றுக் கொண்டுள்ளீர்களா ? :<br>ஆம் எனில், நொத்தாரிசுப் பணியை தொடங்கிய திகதி :<br>(ii) ஒரு போதனா சட்டத்தரணியாக நீங்கள் பணியாற்றுகின்றீர்களா ? : |
| 07 | கல்விசார் மற்றும் தொழில்வாண்மைத்துவத் தகைமைகள் :<br>(பட்டங்கள் மற்றும் பட்டப் பின்படிப்பு தகைமைகள் முதலியன) |

| | |
|---|---|
| 08 | சட்டத் தொழிற்துறையில் உயர் சாதனை:<br><br>(i) முனைப்பான சேவையில் ஈடுபட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை :<br>(ii) கடந்த 20 வருடங்களுள் முனைப்பான நீதிமன்றப் பணி :<br>(iii) சிறப்புத் தேர்ச்சித்துறை :<br>(iv) சட்டத் துறையின் மேம்பாட்டிற்கான சார்புரை மற்றும் பங்களிப்புகளைக் குறிப்பிடுக. (கடந்த 5 ஆண்டுகளில் விண்ணப்பதாரி தோற்றிய குறிப்பிடத்தகுந்த வழக்குகளைக் குறிப்பிடுவதோடு, சம்பந்தப்பட்ட பக்கங்களின் (அறிக்கையிடப்பட்ட/ அறிக்கையிடப்படாத ) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இத்துடன் இணைக்கவும்.<br><br>(v) விண்ணப்பதாரியினால் பயிற்றுவிக்கப்பட்ட கனிஷ்ட சட்டத்தரணிகளின் பெயர்கள்: |
| 09 | நடத்தைத்தரமும் தொழில்வாண்மைத்துவ விவேகமும் :-<br><br>(i) சிறு போக்குவரத்துக் குற்றங்கள் தவிர, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் குற்றத்திற்காக நீங்கள் எப்போதாவது குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா அல்லது குற்றவாளியாக ஏற்றுக் கொண்டுள்ளீர்களா ? :<br><br>(ii) விண்ணப்பதாரி உயர் நீதிமன்றத்தினால் நீதிமன்ற அவமதிப்பு விசாரணைக்கு உட்பட்டிருந்தாரா ? / குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின் தண்டனையின் தன்மை :<br><br>(iii) விண்ணப்பதாரி தொழில்சார் துர்நடத்தைக்கு/தவறான செயலுக்கு உயர் நீதிமன்றத்தினால் அல்லது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் விசாரணைகளுக்கு உட்பட்டுள்ளாரா, உட்பட்டிருந்தாரா? குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின் தண்டனையின் தன்மை :<br><br>(iv) விண்ணப்பதாரி உயர் நீதிமன்றத்தினால்/இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு உட்பட்டுள்ளாரா ? :<br><br>(v) விண்ணப்பதாரி நியாயாதிக்கத்தின் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஒரு கடன் தீர்க்க வழியற்றவராக இனங்காணப்பட்டிருந்தாரா ? : |

| | |
|---|---|
| *10* | *சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களில் வகித்த பதவிகள் மற்றும் விண்ணப்பதாரியின் பங்களிப்பும் கிடைக்கப்பெற்ற விருதுகளும்:* |
| *11* | ஒரு சட்டத்தரணியாக விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட வெளியீடுகளும் சமர்ப்பணங்களும்: |

***வெளிப்படுத்தல் :***

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் பொய்யான தகவல்களை வழங்கவில்லை அல்லது ஏதேனும் உண்மைத் தகவல்களை மூடிமறைக்கவில்லை என்றும் இத்தால் நான் வெளிப்படுத்துகிறேன்.

மேலும், சனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டதன் பின்னரும் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிழையானவையெனக் கண்டறியப்படுமிடத்து, சனாதிபதி செயலகம் அத்தகைய நியமனத்தை இரத்துச் செய்யுமாறு உயர் நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை நான் முழுமையாக அறிவேன்.

-----------------,
கையொப்பம்.

திகதி :----.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.